விலை: சதம் 75

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 | ஆவணி 17 | துல்ஹஃ 2 | இதழ் 200

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 2-9-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
புதிய வகுப்புகள்
A/L 83 பரீட்சைக்கான 82 மீட்டல்
தாவரவியல்:- சிவவீரசிங்கன்
விலங்கியல்:- ஜெகானந்தகுரு
இரசாயனம்:- அன்ரன்
பௌதிகம்:- கலாபரன்
விவசாயம்:- இராஜேந்திரா
தூய/பிரயோக கணிதம்:- A. பத்மநாதன்
ஆரம்பம்: 5-9-1981 காலை 8-30

# பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை தமிழர் கூட்டணி கைவிடுமா?

## ஆட்சிமன்றக்குழு விரைவில் அறிவிக்கும்

(கொழும்பு)

**அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே மூன்று அம்சங்களில் உடன்பாடுகள் ஏற்பட்டபோதிலும் கூட்டணியின் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பு, உடனடியாகக் கைவிடப்படமாட்டாது என்று கூட்டணி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.**

**பகிஷ்கரிப்பை கைவிடுவதா தொடர்வதா என்பதை, கூட்டணியின் பாராளுமன்றக்குழுவே முடிவுசெய்யும் என்று நம்பப்படுகிறது.**

அரசுக்கும் கூட்டணிக்குமிடையே மூன்று கட்டங்களாக பேச்சுவார்த்தை நடந்ததும், இதனைத் தொடர்ந்து மூன்று அம்ச உடன்படிக்கை ஏற்பட்டதும் தெரிந்ததே.

உடன்படிக்கையைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ டி அல்விஸ் நேற்று முன்தினம் இரவு நடத்திய பத்திரிகையாளர்கள்மாநாட்டில்; தமிழர் விடுதலைக் கூட்டணி அதன் பகிஷ்கரிப்பை கைவிடக் கூடும் என்று தாம் நம்புவதாக நிருபரொருவரின் கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

இதுகுறித்து கூட்டணியின் உயர்வட்டாரங்களுடன் "ஈழநாடு" நேற்றுத் தொடர்பு கொண்டபோது பாராளுமன்றப் பகிஷ்கரிப்பை கைவிடுவது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி முடிவெதனையும் எடுக்கவில்லை என்றும், இது பற்றி பாராளுமன்றக்குழு கூடியே இறுதியாக தீர்மானிக்கும் என்றும் தெரிய வந்தது.

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்துடன் "ஈழநாடு" நேற்று தொடர்பு கொண்டபோது கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று தீர்மானங்களைத்தவிர வேறு எது தொடர்பாகவும் கருத்து எதனையும் தெரிவிக்க திரு. அமிர்தலிங்கம் திட்டவட்டமாக மறுத்து விட்டார்.

ஆனாலும், கூட்டணி கொள்கையை இவ்வுடன்படிக்கை எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாது என்று உறுதியாக கூறிய திரு. அமிர்தலிங்கம்; தமிழ்நாட்டு அனுதாப நடவடிக்கைகளையும் இது பாதிக்க நியாயமெதுவுமில்லை என்றும் தெரிவித்தார்:

ஜனாதிபதி ஜயவர்த்தன தனது சவூதி அரேபிய சுற்றுப்பயணத்தை முடித்து

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் சென்ற இளைஞர்கள்: சொந்த விருப்பத்தில் ஊர் திரும்பினர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதியிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குச் சென்ற 10க்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கடந்த வாரம் ஊருக்குத் திரும்பி வந்துள்ளார்கள்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள அகதிகள் முகாமில் தாங்கள் தங்கியிருந்ததாகவும், பல்வேறு கஷ்டங்களை அங்கு எதிர்நோக்க வேண்டியிருந்ததாகவும் தமது சொந்த விருப்பத்தின் பேரில் தாங்கள் இங்கு திரும்பி வந்துள்ளதாகவும் மேற்படி இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

## யாழ். நீதிமன்றத்தில் 3 இராணுவத்தினர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

களவு சம்பந்தமாக தம்மை கைதுசெய்த பொழுது மூன்று இராணுவ வீரர்கள் தம்மைத் தாக்கியதாக யாழ் நீதிமன்ற நீதவானுக்கு ஒருவர் முறையிட்டதைத்தொடர்ந்து 3 இராணுவ வீரர்களும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

குருநகரைச்சேர்ந்த செ. கிறேசிக்குச் சொந்தமான 3,500 ரூபா பெறுமதியான சங்கிலியை அகமட் லெப்பை யாகூப் (28-வயது) என்பவர் களவெடுத்ததாக யாழ். நீதிமன்றத்தில் யாழ். பொலிசாரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ராணுவ வீரர்களான டபிள்யு. விஜயரத்தின, ரி. பி. மென்டிஸ், ஜே ஏ. எஸ். ஜயக்கொடி ஆகியோர் அழைக்கப்பட்டு நீதவானால் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

எதிரியை இம்மாதம் 15ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

(மா)

## நீதிமன்றத்தை அவமதித்தார் ஒருமாத சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ஒருவருக்கு யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் ஒருமாதச் சிறைத்தண்டனை விதித்தார்!

களவு ஒன்று சம்பந்தமாக முகமத் தமீம் என்பவர் யாழ். நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தார். இவர் எதிரிக்கூண்டிலிருந்து இறங்கிவரும்பொழுது சட்டத்தரணி ஒருவரைப் பார்த்துப் ஏசியதாக நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

யாழ். நீதிமன்ற பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எஸ். மாணிக்கவாசகர் இவரை திரும்பவும் நீதிபதியின் முன்னர் ஆஜர்செய்தபோது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதவான் ஒருமாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## 15 பேர் பலி

சென்னை, செப். 1

தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் விபத்தில் 15 பேர் பலியாகினர் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் 88 பேர் காயமடைந்தனர் இவர்களுள் 72 ஆண்களும் 14 பெண்களும் 2 குழந்தைகளும் அடங்குவர்.

(இ)

## கலைஞர் கண்டனம்

சென்னை, செப். 1

இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவாக சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்திய எதிர்க்கட்சிகளை தமிழக அரசு பாரபட்சமாக நடாத்துகிறது.

இவ்வாறு தி.மு.க தலைவர் திரு மு. கருணாநிதி குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஆதரவாக சென்னையில் ஊர்வலம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்ட காந்தி காமராஜர் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் கட்சியினர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதே வேளையில் இதேகாரணத்திற்காகக் கைதுசெய்யப்பட்ட தி.மு.கவினர் தொடர்ந்தும் சிறைவைக்கப்பட்டுள்ளனர் என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

(இ)

## வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

சின்ன வெங்காயம் ஓரிரு தினங்களில் பெருமளவில் இறக்குமதி செய்யப்படும் என்று கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனம் அறிவித்துள்ளது

உள்ளூரில் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தவும் வர்த்தகச் சுரண்டலைத் தடுக்கவுமே வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலியின் உத்தரவின் பேரில் சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

ஹோம் பிறைன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
உல்லாச பஸ் சேவை
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ்ப்பாணத்திலிருந்து
புறப்படுதல்:
செவ்வாய், வியாழன்,
ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பிறைன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: இல: 7596.
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பிறைன்ஸ் லிமிட்டட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.
J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
டிக்கட் விலை: ரூபா 65-00

# வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

Toyota Coaster 26 ஆசனங்கள் உடைய பஸ் 1978 மொடல் விற்பனைக்கு உண்டு. 2-9-81 அன்று பார்வையிடலாம். விமல் காமக்ஸ், 131/2, பருத்தித்துறை வீதி, நல்லூர். 0801

கே. கே. எஸ். பிரதானவீதியில், பெரியபுலம் பாடசாலைக் கருகாமையில் சதுரமான 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பொ. வேலுப்பிள்ளை, 169/3 கோவில் வீதி. நல்லூர். தொடர்பு கொள்ளவும். 0785

நல்ல நிலையில் டீசல் மொறிஸ் மறினர் '31 சிறி 4935 கார் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க பா. ஹரிச்சந்திரா, பாரிமணியம் ஸ்ரோட், தெல்லிப்பளை. 0782

### தேவை

பயிற்சியாளர் (Apprentices) கடைச்சல், பிற்றிங், வேல்டிங், கிறுக்கேற்றிங் வேலைகட்கு தேவை. விண்ணப்பிக்கவும். இயந்திரஸ், 336, பணிக்கட்டு வீதி, யாழ்ப்பாணம். 0804

காசாளர் தேவை. 3-9-81 வியாழன் காலை 10 மணிக்கு நேரில் வரவும். வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம், 148 1/1 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 0806

வீடு, அல்லது ஒன்று முதல் ஒன்றரை பரப்பு காணி உடன் தேவை. யாழ்ப்பாணம் முனிசிப்பல், எல்லைக்குள் இருப்பது தக்கது. தொடர்பு: C/o கல்யாணி 192 ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். 0813

## திருமண அழைப்பு

**சிவராஜா — பத்மாவதி**

(பங்காளர்,
ராஜா ஸ்ரோர்ஸ்,
கொழும்பு-13)

காலம்: துர்மதி ஆண்டு ஆவணித் திங்கள் 18-ம் நாள் வியாழக்கிழமை (3-9-1981)

நேரம்: காலை 8-00 மணி முதல் 9-15 வரை

இடம்: மணமகள் இல்லம் குமுழங்குளி-சகலவோடை, காரைகர்.

மேற்படி திருமண வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| வே. இராமலிங்கம் | திருமதி |
| தம்பதிகள் | ச. காசிநாதர் |
| "பாக்கிய பவனம்" | "கணபதி வாசம்" |
| வேதர் அடைப்பு, | குமுழங்குளி, சகலவோடை, |
| காரைநகர். (0812) | காரைநகர். |

## பிஸ்கால் விற்பனை

யாழ். மாவட்ட நீதிமன்றம்

பிலிப் மனுவல்பிள்ளை யோசெப், 66, கோவில வீதி, யாழ்ப்பாணம்.

—வழக்காளி

வழக்கு இலக்கம்
காசு/760

அந்தோனிப்பிள்ளை யேசுதாசன் 704, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

—எதிராளி

மேற்சொல்லிய வழக்கில் எதிராளியிடமிருந்து வெளியாக்கில் விரிக்கப்பட்ட தொகைப் பணம் ரூபா 16,445/50 மேலும் முதல் ரூபா 14,950/-க்கும் 13-6-80 லிருந்து 14-08-80 வரைக்கும் 12% வீத வட்டியும், 14-08-80 லிருந்து முழுவதும் அறுக்கும்வரை முழுத்தீர்வைத் தொகைக்கும 5% வீத வட்டியும், வழக்குச் செலவும் அறவிட வேண்டியுள்ளது. எதிராளி குறித்த தொகையை செலுத்தத்தவறியபோன காரணத்தால் அவருக்குச் சொந்தமான 'Compresser Machine' ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த எந்திரம் 1981-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு என்னால் இந்நீதிமன்ற வளவில் பிஸ்கால் விற்பனை நிருவாகங்கட்கமைய பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கொள்வனவுக்காரர் உடனடியாக முழுப்பணத்தையும் செலுத்தி எந்திரத்தை அப்புறப்படுத்தல்வேண்டும். எந்திரத்தை 9-09-81-ல் பி. ப. 1-00 மணி தொடக்கம் 4-00 மணிவரை பார்வையிடலாம்.

தா. குலஞானம்
பிஸ்கால்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.
31-08-81. 0803

## புதிய கிளை

(பசிலைப்பள்ளி)

பசிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய கிளையொன்றினை மாமுனை என்ற இடத்தில் திறந்துள்ளது.

இக்கிளையினை பளை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். முருகவேல் திறந்துவைத்தார். இவ்வைபவம் சங்கத் தலைவர் திரு. தே. சவரிமுத்து தலைமையில் நடைபெற்றது. (க)

## பாராட்டு விழா

(உடுப்பிட்டி)

அண்மையில் புதிய குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்திரு. டி ஜெயக்குமார் அடிகளாரைப் பாராட்டி விழா ஒன்றை நடாத்த கரவைக் கத்தோலிக்க இளைஞர் மன்றம் தீர்மானித்துள்ளது.

இப் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பரலோக மாதா தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஏப்பிரல் 1982

## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 9-9-81ல் ஆரம்பமாகின்றன. சேரவிருப்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். 1981 பரீட்சைப் பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டா.

அதிபர்
தொலைபேசி எண்: 617
76, பிரதான வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0758

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மரண சாதனம் எதையும் நிறைவேற்றாது இறந்த "சிவபதி" கே. கே. எஸ். வீதி இணுவில் கிழக்கு இணுவிலில் வசித்த மாணிக்கர் திருநாவுக்கரசு அவர்களின் மரணச் சொத்துக்கு நிர்வாக அதிகாரப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பம் சம்பந்தமான விடயத்தில்

(மரணமெய்திவர்)

சுத்துவ வழக்கு
இலக்கம்/த/3587

இணுவில், இணுவில் கிழக்கு கே.கே.எஸ் வீதி "சிவபதி" மாணிக்கர் திருநாவுக்கரசுவைம்பெண் சிவபாக்கியம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்கு நிருவாக அதிகாரப்பத்திரத்தைப் பெறுவதற்காகத் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1981-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 4-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஆடி மாதம் 9-ம் திகதி.
நீதிமன்றக்கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

வரைந்தவர்:
ச. செல்வராசா
மனுதாரின்
சட்டத்தரணி 0798

“டெலிவிஷன் மூலம்

## திரைப்படங்களைக் காட்ட அனுமதியளிக்க வேண்டும்”

(திருகோணமலை)

திரைப்படக் கூட்டுத்தாபனம் தணிக்கை செய்த பின்னர் அனுமதித்த திரைப்படங்களைப், பொதுமக்களுக்கு டெலிவிஷன் மூலம் காண்பிக்க அனுமதியளிக்க வேண்டும்.

திருமலை மாவட்ட அபிவிருத்திசபை தலைவர் திரு அ. தங்கத்துரை சபைக்கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

திருகோணமலை எம்.பி.திரு. இரா சம்பந்தன், இது விஷயத்தில் உள்ள சட்டப் பிரச்சினை பற்றி ராஜாங்க அமைச்சரிடமிருந்து ஆலோசனை பெற வேண்டும் என்று கூறினார்.

கிண்ணியா பகுதியில் சினிமா தியேட்டர்கள் எதுவும் இல்லாததினால் டெலிவிஷன் மூலம் படம் காண்பிக்க பலர் அனுமதி கோரியிருப்பதாகவும், இதன் மூலம் சபைக்கு ஓரளவு வருமானம் கிடைக்கும் வாய்ப்பு உண்டென்றும், கிண்ணியா உபகாரியாலய அதிகாரி சமர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விஷயம்பற்றி ஆராயப்பட்டு, தலைவரும், உறுப்பினர்களும் தங்கள் கருத்தை தெரிவித்தனர்.

தியேட்டர்கள் இல்லாத கிராமங்களில் டெலிவிஷன் சினிமா, பொதுமக்களுக்குக் காண்பிக்க அனுமதி கிடைக்குமா என்பது பற்றி ராஜாங்க அமைச்சு செயலாளரிடமிருந்து விபரம் கோருவதென தீர்மானிக்கப்பட்டது. (க)

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 17-ம் திகதி
புதன்கிழமை
(2-9-81)

மேடம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும் வாகனம் செலுத்துவோர் அதிக நிதானத்துடன் இருக்கவேண்டும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும் தொழில்புரியும் இடத்தில் பொறுமை வேண்டும்.

இடபம்: வாழ்வும் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும் பொருள் வரவிலும் திருப்திகரமானநிலை தென்படும்.

மிதுனம்: செய்யும் தொழிலில் சிரமங்கள் தோன்றக்கூடும். உடல் நலமும் சிறிது பாதிக்கப்படலாம் நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரி விடுவதற்கு முனையக்கூடும். அவதானம் வேண்டும்.

கடகம்: திருப்திகரமான திருப்பத்திற்கு இடமுண்டு. விருந்தினர்களின் வருகைக்கு உறவினர்களின் ஆதரவு இடமுண்டு.

சிங்கம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வுக்கு வழி கோலப்படும் சிலருக்கு புதிதாக தொழில்கிடைக்கக்கூடும். வருவாயும் வளரும்.

கன்னி: அதிர்ஷ்ட தேவதையின் அணைப்புகளும் கிடைக்கலாம். திரைப்படத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகமளிக்கக்கூடும்.

துலாம்: அற்ப விடயத்திற்கு ஆத்திரப்படுவீர்கள் நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்.

விருச்சிகம்: சிறு விடயங்கள் கூட அதிக ஆத்திரத்தை தரலாம் வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும். சூழ்ச்சி வலைஉங்களைச் சிக்கவைக்கலாம்.

தனு: வீட்டில் சுபகருமங்கள் இடம் பெற்று பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

மகரம்: சிந்தனை தூக்கும் சிறிவரும் கோபம் உடன்பிறந்த சகோதரத்தில் உடல் நிலையும் கவலையைத் தரலாம்.

கும்பம்: ஆக்கப்பணிகளில் ஈடுபடுபவர்கள் பிறருடைய ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் விருந்து பசாரத்துக்கு இடமுண்டு.

மீனம்: எதிர்பார்த்த பொருள்வரவிற்கு இடமுண்டு. பூமியால் லாபமுண்டு. புத்திர வழியால் நன்மையுண்டு.

சோதிடஜோதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தேவை

பவர் பிறெஸ் (Power Press Opererators) ஒப்பறேற்றேஸ் "இலெக்ரோ பிளேற்றிங்" வேலையில் ஏறக்குறைய ஐந்து வருட அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. தொடர்பு:

சபா சின்னத்தம்பி,
மருதனுமடம்,
தொலைபேசி: 307,
சுன்னாகம்.
0807

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

வழங்குநர் பதிவு செய்தல் - 1-9-81 - 31-12-81

வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பான எனது 18-8-81ந் திகதிய அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி 07-09-81 ஆக நீடிக்கப்பட்டுள்ளது.

(தேவநேசன் நேசையா)
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

அபிவிருத்திச் செயலகம்,
யாழ்ப்பாணம். 27-8-81 0809

## மணிவாக்கு

நாம் போதிய நெடுங்காலம் அழுதாயிற்று! இனியும் அழவேண்டாம் எழுந்து நின்று ஆண்மையுடையவராகுங்கள். ஆண்டகையாக்கும் மதமே நமக்கு வேண்டுவது.

சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## செயற்கரியசெய்த பெரியர்

காலஞ்சென்ற டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா அவர்களைப்பற்றி திரு. அ. வயித்திலிங்கம் அவர்களால் எழுதப்பெற்ற கட்டுரையை எமது நேற்று முன்தினம் பத்திரிகையில் படித்தவர்கள் நிச்சயம் முனிவர் கூற்றை நினைவு கூர்வார்கள்.

செயற்கரிய செய்வர்
பெரியர், சிறியர்
செயற்கரிய செய்கலாதார்

சிறியர் போல் சிறு மரங்கள் நிறைந்த சிறுகாட்டில், நீண்டு நிமிர்ந்து என்றும் வளையாத யாழ்ப்பாணப் பனைமரம்போல் வாழ்ந்தவர் பெரியர் டாக்டர். பனைமரங்களெல்லாம் வானளாவித் தாரகைகளைப் பார்த்த வண்ணமே நிற்கின்றன.

இலட்சியத்தில் இம்மியும் வழுவாது நிமிர்ந்த நோக்குடன் வாழ்ந்த பெரியர் தமது நீண்ட வாழ்வில் நிகழ்த்திய அரிய சாதனைகள் அக்கட்டுரையில் தெளிவாகவும் மிகைபடாமலும் வரையப்பட்டுள்ளன.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில், தேசிய வருடப்பிறப்பில் அவதரித்த இத்தவப் புதல்வனை நான்கு மாதங்களுக்குமுன் யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் தரிசித்த பெருந்திரளான தமிழ்மக்கள், இந்த நூற்றாண்டு முடிவடையும் வரையாவது அவர் வாழ்வாரென்று மனமார வாழ்த்தியிருப்பர்.

அங்கு கூடியிருந்த பெருமக்கள் பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பல வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டவர்கள். சிலரைத் தவிர எல்லோரும் தமிழ் மக்கள். அவர்களைப் பிணித்திருந்த ஒருமுகப்பட்ட கருத்து என்ன?

நாட்டின் சுதந்திரத்துக்கும் ஏழைமக்கள் நல்வாழ்வுக்கும் எவ்வித படாடோபமின்றி உழைத்த நன்மகன். நலிவுற்ற எவர்களுக்கும், சாதி மத பேதமின்றி கனிந்த மனத்துடன் உதவிய திறமைசால் வைத்திய நிபுணர்.

யாழ்ப்பாணத்தில் சில வருடங்களுக்குமுன் 'டாக்டர்' என்றால் 'பீ எஸ்' என்ற பரோபகாரி டாக்டர் சுப்பிரமணியத்தைக் குறித்தது. மாத்தறையில், ஏன் தென்னிலங்கையில் டாக்டர் என்றால் டாக்டர் விக்கிரமசிங்காவையே குறிக்கும்.

யாழ்ப்பாண வரவேற்பில் டாக்டர் அவர்கள் வழங்கிய பகிரங்க இரகசியம் இன்று எமது நினைவுக்குவருவது இயல்பு. லண்டனில் பட்டப் படிப்பை முடித்துவிட்டு நாடு திரும்ப ஆயத்தமான டாக்டர் மூன்று இலங்கை இளைஞர்களைச் சந்தித்தாராம்.

''படிப்பை விரைவில் முடித்து நாட்டின் சுதந்திரத்திற்குழைக்க விரைமின்'' என்றாராம்.

அவர் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்ட மும்மூர்த்திகள்; 1. முன்னை நாள் அமைச்சர் பீற்றர் கெனமன். 2. காலஞ்சென்ற முன்னை நாள் எம். பி. பீ. கந்தையா. 3. கணிதமேதை கம்யூனிஸ்ற் சிந்தாந்தவித்தகர் அ. வயித்திலிங்கம்.

டாக்டரின் அபிலாஷைகளை எவ்வளவுதூரம் இவர்கள் நிறைவேற்றினார்களென்பது நாட்டின் வரலாறு குறிக்கும்.

பல முற்போக்குவாதிகள் போல், அந்திய காலத்தில் தாங்கள் அரும்பாடுபட்டு உழைத்த பல இலட்சியங்கள், பிற்போக்குவாதிகளால், முதலாளித்துவ கும்பல்களால், இடர்ப்பட்டிருப்பதைக் கண்டு கவலையுடன் கண்மூடிய கசப்பான அனுபவம் டாக்டருக்கும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

அரசியல் ஞானிகள் ஓரளவிற்கு தீர்க்கதரிசனம் கொண்டவர்கள். அவர்களின் உழைப்பு, இன்றும் பல துறைகளில் மலர்கின்றது; இன்னும் அது பூரணமாய் மலரும் என்ற நம்பிக்கை அவர்களைக் கைவிடுவதில்லை.

## சமுதாயத்தின் சாபக்கேடுகள்

உல்லாசத்துறையால் வரும் பெருஞ்செல்வம் ஒரு பக்கம்; அதனால் விளையும் கேடுகள் இன்னொருபக்கம். விபச்சாரம், மிருகக்கொலை போன்ற தேசியத் தீங்குகளையே நாம் குறிப்பிடுகின்றோம். மிருகசாலைகள், வன பாதுகாப்பு வளையங்கள் எவற்றையும் பொருட்படுத்தாமல், அரிய மிருகங்கள் - மான், மரை - வேட்டையாடப்பட்டு அவற்றின் இறைச்சி கறுப்புச் சந்தை விலைக்கு உல்லாசப் பயணிகளின் ஹோட்டல்களுக்கு விற்கப்படுகிறது.

பௌத்த மதத்துக்கு முரண்பட்ட இவ்வித பாபச் செயல்களுக்கு முடிசூட்டுமாற்போல அடுத்து வருவது குதிரைப் பந்தயம்

மன்னர்களின் சிறந்த பொழுதுபோக்கு இது. சில காலம் இது ஒரு சமுதாய சாபக்கேடு என பௌத்த காங்கிரசின் கிளர்ச்சியால் நிற்பாட்டப்பட்டிருந்தது

"போனா மச்சான் திரும்பி வாருன்" என்பது இங்குள்ள சில குபேர குடும்பங்களுக்கு மகிழ்ச்சியளிக்கும்; அதில் பாதகமில்லை. ஆனால் குதிரைகளைக் கண்ணாலே காணாத, என்றுமே காணப் போகாத பல வறிய குடும்பங்களின் வாயில் மண் போடப்போகின்றதே என்பதுதான் எமது அச்சம்.

நல்லகாலம்; கொழும்பு பௌத்த இளைஞர் சங்கம் இதனை எதிர்த்து, கண்டித்து, சூதாட்டத்தை சட்டவிரோதமாக்கவேண்டுமென்று ஜனாதிபதியைக் கேட்டிருக்கின்றனர்.

'வேண்டற்க வென்றிடினும்
சூதினை வென்றதூஉம்
தூண்டில் பொன்மீன்
விழுங்கியற்று''

வென்றுவிட்டால் நல்லதாயிற்றே என்று எண்ண வேண்டாம். சூதாட்டத்தில் வென்றது மீன்பிடிப்பவன் எறிந்த தூண்டிலின் இரும்புக் கொக்கியை மீன் விழுங்கினது போலவேயாகும். சூதில் வென்றது ஒருவனை மேன்மேலும் சூதாட்டத்தில் சிக்கவைத்து அழிக்கும்.

# சமதர்மஞானி விக்கிரமசிங்கா

[டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் அக்கிராசஇல்லத்தில் பல மாதங்கள் வாழ்ந்து டாக்டரிடம் அரசியல் அறிவு பெற்ற கட்டுரையாளர்; தம்து பசுமையான எண்ணங்களை இங்கு நினைவு கூறுகிறார்.]

''அமரத்துவம், அயரா
உழைப்பின் கனி''
''மக்களுக்காக வாழ்பவரே
மாசிலத்தில் ஓங்கும்
குலத்தினர்''

இலங்கை அன்னையின் முதன்மை பெற்ற சமதர்மஞானி விக்கிரமசிங்கா அவர்கள் இவ்வுலகைவிட்டு நீங்கிய செய்தி ஆற்றொணாத்துயரில் ஆழ்த்திவிட்டது.

### 'விக்கி' வரலாறு

அமரர் விக்கிரமசிங்கா அவர்களின் வரலாறு, இந்நாட்டு விடுதலை இயக்கத்தோடும் ஏறக்குறைய தொழிலாளர் இயக்கத்தோடும் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் பின்னிப் பிணைந்தது.

உலகில் மகத்துவ விஞ்ஞான சமதர்ம இயக்கம், 1918-ம் ஆண்டைய ஒக்டோபர் சோவியத் புரட்சியோடு ஆரம்பமாயிற்று. மேதை விக்கிரமசிங்கா இங்கிலாந்தில் மருத்துவப் பயிற்சி பெற்ற காலம் தொடக்கம், சமதர்ம நெறியே உலகப் பிணிகளுக்கு அருமருந்தாகும் எனக் கொண்டார். இது 1930-ம் ஆண்டளவில். அன்று தொடக்கம் அவரது இறுதி மூச்சுவரையும் உலக மக்கள் உரிமையோடும், மனிதர்களாகவும் வாழவேண்டும் என்பதற்காக அவர் அரும்பாடுபட்டார்.

### அரசியல் உரிமையும் இழந்திருந்தார்

தென் இலங்கையில் பிறந்த இவர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை 'இம்' என்றால் சிறைவாசம் எனும் எதிரமறைக் கொள்கையைக் கொண்டிருந்த காலத்திலேயே எதிர்க்கத் தொடங்கி, சிறையிலிடப்பட்டு, ஏழு வருடங்கள் அரசியல் உரிமையும் இழந்தார். இலங்கையில் பொதுவுடமைக் கட்சியை உருவாக்கிய இவர், உலகில் எந்த எந்த நாடுகள் விடுதலை வேண்டி நின்றனவோ அங்கெல்லாம் சென்று புரட்சிவாத இயக்கங்களோடு இணைந்து வீரக்குரல் எழுப்பி வெற்றியும் கண்டார்.

பாரதம், ஸ்பெயின், அயர்லாந்து ஆகியவை இவற்றுள் சில நாடுகளாகும்.

### பொதுவுடமைத் தந்தை

இலங்கையைப் பொறுத்தவரையில் இவரே இந்நாட்டின் பொதுவுடமைத் தந்தை. சமதர்மவாதம் இந்நாட்டில் பல விமர்சனங்கள் பெற்றன. பல அறிஞர்கள் இவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்கினார்கள்.

ப. சந்திரசேகரம்
(கல்வித்துறை-
யாழ். பல்கலைக்கழகம்)

ஆனால் இவர்கள் எல்லோரிலும் முதல்வருள் முதல்வராக விளங்கியவர் விக்கிரமசிங்கா. பல அறிஞர்கள் சமதர்ம வேதாந்திகளாக விளங்கினார்கள்: பலர் இத்தத்துவமே மண்ணுலகில் விண்ணுலகம் காண வழிவகுக்கும் என்றுகொண்டாலும், தங்கள் வாழ்க்கையில் ஓரளவேனும் அர்ப்பணம்செய்யாது இந்நெறியைப் பரப்ப முயன்றார்கள்.

விக்கிரமசிங்கா அவர்கள் 'பாரம்பரிய தனவந்தர்கள்' குடும்பத்தைச் சேர்ந்தவர். இளம் வயதிலேயே பிரித்தானியா சென்று பயிற்சிபெற்று திறமைபெற்ற மருத்துவராக விளங்கியவர், தென் இலங்கை 'மன்னன்' என்று கொள்ளப்பட்டவர். ஆனால் தனது ஆங்கில இல்லக்கிழத்தியாரான டொறீன் அம்மையாரோடுசேர்ந்து முற்றும் துறந்த சமதர்ம முனிவராக தனது சுகபோகங்கள் எல்லாவற்றையும் அர்ப்பணித்து 60 வருடங்கள் அரும்பணியாற்றியவர்.

### புதிய மரபினை உருவாக்கினர்

சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும், இவரும், இவரது இல்லக்கிழத்தியாரும், இவரது உறவினர்களும் பொதுவுடமைக் கட்சி அங்கத்தவர்களாக விளங்கி, விடு

[6-ம் பக்கம் பார்க்க]

"தமிழ் நாட்டில் உள்ளதுபோல்

## பஞ்சாயத்து முறையை அமுல் செய்யவேண்டும்''

### யாழ். மாநகரசபை தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்து முறையைப் பின்பற்றி அதற்கான நடவடிக்கையிலிறங்கும்படி யாழ். மாவட்ட அபிவிருத்திசபையைக் கோரும் தீர்மானம் யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு. யோ. அ. செல்வநாயகம் இப்பிரேரணையைப் பிரேரித்தார்.

தீர்மானத்தின் விபரம் வருமாறு: யாழ் நகரில் நடைபெற்ற வன்செயல்களின்பின் மக்கள் பொலிஸ்நிலையம் செல்லப் பயப்படுவதால் அத்தியாவசிய விடயங்களை செயல்படுத்தமுடியாத நிலையில் மக்கள் அவதியுறுகின்றார்கள். ஆகவே இந்தியாவின் தமிழ் நாட்டில் நடைபெற்றுவரும் பஞ்சாய முறையை பின்பற்றி அதற்கான நடவடிக்கையிலிறங்கும்படி யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையைக்கோருவதென இச்சபை தீர்மானிக்கிறது. [மா-க]

## "மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களை திறவுங்கள்"

### ஜனாதிபதியிடம்

### யாழ். மாநகரசபை கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

சகஜ நிலையை மீள்விக்கும் வகையில் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களை உடன் திறக்குமாறு ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் யாழ். மாநகரசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் திரு இராஜா விசுவநாதன் இப்பிரேரணையைக் கொண்டுவந்திருந்தார்.

தீர்மானத்தின் விபரம் வருமாறு; ''யாழ்ப்பாணத்தில் 1981 மே, ஜூன் மாதங்களில் சம்பவித்த நேர்வுகள் தொடர்ந்தும் சம்பவியாது தவிர்க்கும் பொருட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீடித்து இடம்பெற்ற படைக்குவிப்பை நிறுத்துமாறும், வாபஸ் பெறுமாறும், பாதுகாப்புக்கு வேண்டப்படும் இராணுவத்தினரின் நடமாட்டத்தை பாதுகாப்பு முகாம்களுக்குட்பட்டதாக வரையறுக்குமாறும், பொலிஸ் நிலையங்களில் இடம்கொண்டிருக்கும் இராணுவத்தினரை அகற்றிவிட்டு சகஜ நிலையை மீள்விக்கும் வகையில் மூடப்பட்ட பொலிஸ் நிலையங்களை உடன்திறக்குமாறும் இச்சபை ஜனாதிபதியைக்கேட்டுக்கொள்கிறது.'' [மா-க]

ஃ இன்று விநாயகர் சதுர்த்தி:

## நல்லவர் மனங்களில் வளருமெம் இறைவா!

ராகம் - நாட்டை தாளம் - ஆதி

பல்லவி

ஐந்து கரத்தவனே ஆனை முகத்தவனே!
சங்கரன் திருமகனே சரணம் ஐயா!! ... [ஐந்து...]

அனுபல்லவி

வல்லபை கணபா பிரணவ சொரூபா!
நல்லவர் மனங்களில் வளருமெம் இறைவா!!...[ஐந்து...]

சரணம்

வானமும் வையமும் துதித்திடும் நாயகா!
ஞானமும் கல்வியும் உதித்திடும் விநாயகா!!
ஞாயிறும் திங்களும் பணிந்திடும் வாரணா!
ஞானமார் கலைகளை கனிந்தருள் பூரணா!!... [ஐந்து...]

- எஸ். முருகையா

## காத்தருளும் பொற்பதியீர் போற்றி

வரமெலாந் தருபவரே! போற்றி போற்றி!
வயங்குபா சாங்குசரே! போற்றி போற்றி!
கரமைந்தை உடையவரே போற்றி போற்றி
கணபதியே! முக்கணரே போற்றி போற்றி!
பரமெனைக் காப்பவரே போற்றி போற்றி
பணிவோர்கட் கருள்பவரே போற்றி போற்றி
கரவில்லார் நெஞ்சத்தேர் போற்றி போற்றி
காத்தருளும் பொற்பதியீர் போற்றி போற்றி!

- ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம்

[கொக்குவில் பொற்பதி விநாயகர் மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது]

# தென்னுபிரிக்கா மீது தடை: அமெரிக்கா 'வீட்டோ'!

நியூயோர்க் செப்1

அங்கோலா மீது தென்னுபிரிக்கா மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்பைக் கண்டித்து அணிசேரா நாடுகள் அந்நாட்டிற்கு எதிராக தடைவிதிக்க வேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புசபையில் கொண்டுவந்த தீர்மானத்தை அமெரிக்கா தனது "வீட்டோ" அதிகாரத்தைப் பாவித்து நிராகரித்து விட்டது.

அங்கோலாவிலிருந்து சகல தென்னுபிரிக்க துருப்புக்களும் உடனடியாக வெளியேற வேண்டுமென்றும் இத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்கா இத்துடன் 27 வது தடவையாக "வீட்டோ" அதிகாரத்தை ஐ. நா. பாதுகாப்பு சபையில் பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. பிரிட்டன் இவ்வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. பிரான்ஸ் இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது.

அதேவேளை அங்கோலாவின் தென்பகுதியில் தென்னுபிரிக்க துருப்புக்களுக்கும் அங்கோலா துருப்புக்களுக்குமிடையே கடும் யுத்தம் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டது. அங்கோலாவின் இரு நகரங்கள் தம்வசமுள்ளதாக தென்னுபிரிக்க துருப்புக்கள் தெரிவித்துள்ளன. [வெ]

## இருவர் கோஷமிட்டனர்

சென்னை, செப். 1

தமிழக சட்டசபை பார்வையாளர் கலரியிலிருந்து கோஷமிட்ட பரமன், இராமகிருஷ்ணன் ஆகிய இருவருக்கு சபை முடியும்வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. [இ-]

# 'தமிழ்நாடு கடுகதி' ரயில் விபத்துக்குள்ளானது!

## 7 பேர் பலி!! 50 பேர்காயம்!!!

சென்னை, செப் 1

சென்னையிலிருந்து புதுடில்லி சென்று கொண்டிருந்த தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரயில் ஆந்திர பிரதேசத்திற்கண்மையிலுள்ள காசிகஸ் நகரில் விபத்துக்குள்ளானது.

இவ் ரயில் விபத்தில் 7 பேர் பலியானதாகவும், 50 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. "தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்" ரயிலின் 17 பெட்டிகள் தடம் புரண்டதினாலேயே இவ்விபத்து இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

விபத்து நடந்த இடத்திற்கு ரயில்வே உயரதிகாரிகள் விரைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு மத்திய ரயில்வே பிரதி அமைச்சர் ஜனுப் ஷரீப் அனுதாபம் தெரிவித்தார். [வெ]

## உணவுப் பொருட்கள் விலை அதிகரிப்பு

வார்சோ, செப் 1

போலந்தில் மா, பாண், தானியவகைகளின் விலைகள் மும்மடங்கு அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

போலந்தில் அண்மையில் உணவுப் பொருட்களின் விலைவாசி அதிகரித்தமையே போலந்தில் சுதந்திர தொழிற் சங்கம் உருவாகுவதற்குக் காரணமாகவிருந்தது. [வெ]

## அடையாள உண்ணுவிரதம்

சென்னை, செப். 1

இலங்கையில் தமிழ்மக்களுக்கெதிராக அண்மையில் இடம் பெற்ற வன்செயல்களைக் கண்டித்து வேலூர், கோயம்புத்தூர், சேலம் ஆகியமாவட்டங்களில் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த பல இளைஞர்கள் நேற்று ஒருநாள் அடையாள உண்ணுவிரதத்தை அனுஷ்டித்தனர்.

# இலங்கைத் திறமைசாலிகளுக்கு நைஜீரியாவில் கதவடைப்பு?

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தொழில் நுட்பவியலாளர் டாக்டர்கள் ஆசிரியர்கள் போன்ற திறமைசாலிகளை தமது நாட்டிற்குள் மேலும் அனுமதிப்பதை நைஜீரிய அரசாங்கம் தடை செய்துள்ளது.

இத்தடை பற்றி அண்மையில் இலங்கை வந்திருந்த நைஜீய உயர் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இலங்கைக்கான ராஜதந்திர தொடர்புகள் புதுடில்லியிலுள்ள நைஜீரிய தூதராலூடாகவே நிகழ்வதாகவும் இதனுல் விசா மற்றும் பிரயாண அலுவல்கள் நேரடியாக மேற்கொள்ளப்பட சிரமங்கள் பல இருப்பதனுலேயே மேற்படி தடையினைத்தாம் விதித்துள்ளதாகவும், இனிமேல் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்தே இத்தகையோரை தாம்தேர்ந்தெடுக்கவிருப்பதாக இவர்கள் அறிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் சுமார் 5000 இலங்கையர்கள் டாக்டர்களாகவும், ஆசிரியர்களாகவும், பொறியலாளராகவும் ஏனைய தொழில் நுட்பவியலாளர்களாகவும் கடமை புரிகிறுர்களெனவும் இவர்களுக்கு அங்கு நல்ல சம்பள வசதிகளும் ஏனைய சௌகரிய வசதிகளும் அரசாங்கத்தினுல் அளிக்கப்படுவதாகவும் இவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## பொன்விழா

(உடுப்பிட்டி)

சகோதரி எலிசபேத் பேக்கர் இலங்கைக்கு மிஷனரியாக வந்து ஐம்பது வருடங்கள் பூர்த்தியான பொன் விழா இம் மாதம் 6ம் திகதி பரந்தன் நவஜீவனத்தில் கொண்டாடப் படவுள்ளன.

# இரு தமிழக சட்டசபை உறுப்பினர் ரிமாண்டில்!

## சபாநாயகர் அறிவிப்பு

சென்னை, செப். 1

சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்கு முன் ஊர்வலம் நடத்திய போது கைதுசெய்யப்பட்ட தமிழக சட்டசபை தி. மு. க. உறுப்பினர்கள் புருஷோத்தமன், சோமு ஆகியோர் இம்மாதம் 11ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளதாகத் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு சபாநாயகர் சட்டசபையில் நேற்றுதெரிவித்தார். (இ-க)

## அமைச்சர் பதவி நீக்கம்

புதுடில்லி, செப். 1

மகாராஷ்டிர மாநிலத்தின் வருவாய்த்துறை அமைச்சர் திருமதி சாலினிதா பட்டேல் அமைச்சரவையிலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவரினுல் வெளியிடப்பட்ட நீதிகளுக்கு தொடர்பான அறிக்கையொன்றைத் தொடர்ந்தே இவா மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. அந்துலேயினுல் பதவிநீக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகாராஷ்டிர மாநில வரலாற்றில் அமைச்சரொருவர் பதவிநீக்கம் செய்யப்பட்டது இதுவே முதல்தடவையாகும். [வெ]

## சாரணர் தேநீர் விருந்து

(யாழ்ப்பாணம்)

சாரணர்களின் தேநீர் விருந்துபசார வைபவம், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் யாழ். மாவட்ட ஆணையாளர் திரு. எஸ். சுந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் இவ்வைபவம் உதவி ஆணையாளர்திரு. எஸ் மூர்த்தி தலைமையில் இடம்பெற்றதாக வெளிவந்தது தவறுகும்.

## கந்தபுராண உரைநூல்

(சுழிபுரம்)

நாவலர் சபையினர் மீண்டும் அச்சுப்பதிவுசெய்த நாவலர் எழுதிய கந்தபுராண வசன நூல் அறிமுகவிழாவை வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் இம்மாதம் 6ம் திகதி பகல் நடாத்தவுள்ளனர். வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறும் இவ்அறிமுக விழாவை யோகி. கா. கார்த்திகேசு ஆரம்பித்து வைப்பார். (க)

ஈரானிய

# ஜனுதிபதி, பிரதமர் மரணம்: பானிசதார் கருத்து

பாரிஸ், செப். 1

"ஈரானிய ஜனுதிபதி, பிரதமர் ஆகியோரது மரணங்கள், அவர்களே தமக்குத் தேடிக் கொண்டவையாகும்" என்று ஈரானின் முன்னுள் ஜனுதிபதி பானிசதார் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளரிடம் கூறினுர்.

இம்மரணங்கள் பற்றிப் பிரஸ்தாபித்த ஜனுப் சதார்; நாட்டிற்குள் எவராவது ஜனநாயகவாதியாக இருக்க முனைந்தால், இறுதியில் அவர்கள் மிக பயங்கர நிலையை அடைய நேரிடும் எனக் கூறியதுடன்; ஈரானிய மத நிர்வாகி அயதுல்லா கொமெய்னியை, அரசியல் விவகாரங்களிலிருந்து விலகியிருக்கும்படி கேட்டுக் கொள்ளுமாறு அவர் தன்னைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

கொமெய்னி ஈரானின் ஒரு பெரும் சக்தியென்றும், ஆனல் அச்சக்தி நாட்டிற்கு உகந்ததல்ல என்றும் அவர் வர்ணித்தார்.

ஜனுதிபதி அலிரஜாய். பிரதமர்

பஹோனுமரணத்தையடுத்து

# ஈரானில் தற்காலிக ஜனுதிபதிசபை

தெஹ்ரான், செப். 1

தெஹ்ரானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவமொன்றில் ஈரானிய ஜனுதிபதி முகமட் அலிரஜாயு பிரதம மந்திரி பஹோனுரும் பலியானதையடுத்து ஈரானில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கு தற்காலிக ஜனுதிபதிசபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஜனுதிபதி சபையில் ஈரானிய சபாநாயகரும், உயர் நீதிமன்ற நீதியரசரொருவரும் இடம் பெற்றுள்ளனர்.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை தெஹரானில் நடப்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஈரானின் முன்னுள் ஜனுதிபதி பானி சதாரும், முன்னுள் பிரதமர் பக்தியாரும் சம்பந்தப்பட்டிருப்பதாக ஈரான் அரசு தெரிவித்துள்ளது.

ஈரானிய ஜனுதிபதி அலி ரஜாயினதும், பிரதம மந்திரி பஹோனுரினதும் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக ஈரானின் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

இவர்களின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்து ஈரானில் ஐந்துநாள் தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படுவது தெரிந்ததே. (வெ)

உதவி அரசாங்க அதிபர்கள்

# காரியாலயத்திற்கு அரசாங்க அதிபர் விஜயம் செய்வார்

## கஷ்டங்களை நேரில் ஆராய்வார்

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட செயலாளருமான திரு. தேவநேசன் நேசையா யாழ். மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் உத்தியோகபூர்வமாக விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறுர்.

திரு தேவநேசன் நேசையா, யாழ். அரசாங்க அதிபராக பதவியேற்றபின் முதல் தடவையாக அரசாங்க அதிபர்களின் காரியாலயங்களை சென்று பார்வையிட விருப்பம் தெரிவித்துள்ளார். இவருடன் மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். தர்மபாலனும் செல்லவிருக்கின்றுர்.

இவரின் விஜயத்தினுல் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் உள்ள குறைகள் நிவர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சில காரியாலயங்களில் ஊழியர் பற்ருக்குறையினுல், பொதுமக்களின் அன்ருட அலுவல்கள் நிறைவு செய்ய முடியாமல் தேங்கிக் கிடப்பதாக கூறப்படுகிறது. இவ்விஷயம் அரசாங்க அதிபரின் கவனத்துக்கு தெரியப்படுத்துவதன் மூலம் தங்கள் பிரச்னைகள் தீரும் என பொதுமக்கள் நம்புகின்றனர்.

இக் காரியாலயங்களில் கடமையாற்றிய பொறுப்பு வாய்ந்த அதிகமான அதிகாரிகள், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால், அவர்கள் திரும்பவும் கடமையில் ஈடுபடுத்தப்படாத நிலையிலிருக்கிறுர்கள் என்றும் இவர்களின் இடத்துக்கு பயிற்சியில்லாத வேலை அனுபவம் குறைந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது.

சில காரியாலயங்களில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே கடமை நேரங்களில் இருப்பதில்லையென்றும் இதனுல் அத்தியாவசியமான அலுவல்களை, பொதுமக்கள் செய்ய முடியாமல் உயரதிகாரிகளுக்கு புகார் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. காரியாலயங்களில் சேவை அனுபவமுள்ள கிராமசேவை அலுவலர்கள். தங்கள் கடமையைவிட, லிகிதர்களின் கடமையைச் செய்வதையும் காணக்கூடியதாக இருக்கிறதாம்.

யாழ் அரசாங்க அதிபரின் விஜயத்தினுல் இக்குறைகள் நிவர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. (மா)

# மன்னார் மறைமாவட்ட ஆயரின் யாழ். மேற்றிராசன விஜயம்

(உடுப்பிட்டி)

மன்னார் மறை மாவட்டத்தின் முதலாவது ஆயர் அதி. வந். கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை இம் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை யாழ். மேற்றிராசனத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

அதி. வந். சௌந்தரநாயகம் ஆண்டகை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்வது இதுவேமுதற் தடவையாகும்.

5ம் திகதி மாலை யாழ்ப்பாணம் வந்துசேரும் ஆயர் சௌந்தரநாயகம் ஆண்டகை யாழ். புனித மாட்டீனார் குருமடத்திலிருந்து யாழ். புனித மரியன்னை தேவாலயம் வரை பவனி ஈக அழைத்துச் செல்லப்படுவார். இதனைத் தொடர்ந்து மரியன்னை தேவாலய அரங்கில் திருப்பலிப்பூசை வைபவம் நடைபெறும்.

திருப்பலிப்பூசையைத் தொடர்ந்து யாழ். ஆயர் அதி. வந். கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் வரவேற்பு வைபவமும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

இவ் வரவேற்பு ஒழுங்குகளைக் கவனிக்கும் முகமாக யாழ். மறைமாவட்டப் பரிபாலகர் அருள்திரு. மைக்கல்சாமி அடிகளார் தலைமையிலான குழு ஒன்றும் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இம்மாதம் 6ம் திகதி மாலை மன்னார் ஆயர் தமது பிறப்பிடமான ஊர்காவற்றுறையில் உள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுப்பார். 7ம் திகதி யாழ். அடைக்கலநாயகி தேவாலயத்தில் நடைபெறும் தேவநற்கருணைச் சுற்றுப்பிரகார ஆராதனை ஆசீர்வாதத்திலும் ஆயர் பங்குபற்றுவார்.

9ம் திகதி யாழ். மறைமாவட்டக்கத்தோலிக்க ஆசிரியர் சங்கமும், மறை ஆசிரியரும் இணைந்து ஆயர் சௌந்தரநாயகம் ஆண்டகைக்கு சிறப்பான வரவேற்பு ஒன்றை யாழ். மறைக் கல்வி நிலையத்தில் நடாத்துகின்றது. (க)

## போல்ரூம் நடனம்

## நஸிரின் உலகசாதனைக்கு 'கினஸ்' அங்கீகாரம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் போல்ரூம் நடனத்தில் ஜனுப் பரித் நஸீர் ஏற்படுத்திய உலக சாதனையை உலகசாதனை சஞ்சிகையான கினஸ் சாதனை சஞ்சிகையார் ஏற்றுள்ளனர்.

இந்த உலக சாதனையை 82-ம் ஆண்டு உலகசாதனை சஞ்சிகைப் பதிப்பில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போல்ரூம் நடனத்தில் ஏற்கனவே 106 மணித்தியாலமாக இருந்த உலகசாதனையை இவ்வருடம் முற்பகுதியில் ஜனுப் பரித் நஸீர் 120 மணி 17 நிமிடம் போல்ரூம் நடனமாடி புதிய உலக சாதனையை ஏற்படுத்தியிருந்தார்.

லண்டனிலுள்ள உலக சாதனை சஞ்சிகை 'கினஸ்' ஆசிரியரின் உதவியாளர் திருமதி மொய்ரா எப். ஸ்ரோச் யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ஜனுப் நஸீரின் உலகசாதனையை ஏற்று அதை வெளியிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவித்துள்ளார். சாதனை முயற்சியில் வெற்றி பெற்ற நஸீருக்கு தமது பாராட்டையும் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ரு)

## பிணையில் செல்ல அனுமதி

(மன்னார்)

டைனமெட் வெடிகளையும், டைனமெட் வெடிகளை வைத்துப் பிடிக்கப்பட்ட மீன்களையும் தம்மன்னார் கடலில் வைத்து பொலிசார் கைப்பற்றினர்.

இச்சம்பவம் தொடர்பாக 4 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர் நால்வரையும் 1500 ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார். (க)

## நூற்றுண்டுதின விழா

(பண்டத்தரிப்பு)

பிரபல சினே தேசத்து எழுத்தாளர் திரு லூசுனின் நூற்றுண்டுதின விழாவை செப்டம்பர் மாதம் 26-ம் திகதியன்று யாழ். நகரில் சிறப்பானமுறையில் கொண்டாடுவது என்று தேசிய கலை இலக்கியப் பேரவை தீர்மானித்துள்ளது. (க)

# சிரமதானம் ஒரு புனிதமான பணி!

(உடுப்பிட்டி)

சிரமதானம் என்பது ஒரு புனிதமான பணியாகும். இப் பணியினால் நாம் பல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு நன்மைகளைப் பெற முடியும். இதனை உணர்ந்தே அரசாங்கம் சிரமதானங்களுக்கு ஊக்கமளித்து வருகின்றது".

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் இமையாணன் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சிவசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில்: சிரமதானம் மூலம் கிராம அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதால் எமது தேவைகளை விரைவாகச் செய்து முடிக்க முடிகின்றது. திணைக்களங்களின் அனுமதியைப் பெற்று ஒரு வேலையைச் செய்வதற்கு காலதாமதம் ஏற்படுவது சகஜம்.

"சிரமதானம் எமக்கு ஆன்மீகப் பலத்தையும் மனதில் ஒரு நிறைவையும் ஏற்படுத்துகின்றது. தேசிய இளைஞர் சேவை மன்றம் இளைஞர்களையும் யுவதிகளையும் ஒருங்கிணைத்து இத்தகைய சிரமதானப் பணிகள் மூலம் தேசிய அபிவிருத்தி வேலைகளை நிறைவேற்றி வருகின்றது.

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த செல்வி எஸ். மகேஸ்வரி பேசுகையில் கூறியதாவது இளைஞர்களுக்கு பல ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்கிக் கொடுத்து அவர்களது வாழ்க்கைக்கு வழி செய்வதே தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் முக்கிய நோக்கமாகும். (க)

## பால் விநியோகம்

(மன்னார்)

மன்னார் பால்சேகரிப்பு நிலையத்திலிருந்து பேசாலைப் பகுதிக்கு பால் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பால்சேகரிப்புநிலையம் வான் மூலம் தினமும் காலையில் பேசாலைப் பகுதியில் பால் விநியோகம் நடைபெற்று வருகிறது.

## பதவி உயர்வு

(மன்னார்)

பேசாலை தபால் நிலயத்தில் 2 ஆம் தர தபாலதிபராகவும், சமிக்ஞையாளராகவும் கடமையாற்றும் திரு. கே. பாலசுப்பிரமணியம் முதலாம்தர தபாலதிபராகவும் சமிக்ஞையாளராகவும் பதவி உயர்வுபெற்றுள்ளார். (க)

## ஜப்பான் பயணம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்ட தந்தி, தொலைத் தொடர்புகள் பொறியியலாளர் திரு. சண்முகவடிவேல் ஜப்பான் பயணமானார்.

இவர் தந்தி தொலை தொடர்புகள் சம்பந்தமாக ஆறு மாதகாலப் பயிற்சியை அங்கு மேற்கொள்வார். பொறியியலாளர் திரு. சண்முகவடிவேல் கரவெட்டியைச் சேர்ந்தவராவார்.


வெள்ளி (மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30
திசைமாறிய பறவைகள்

றாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - விஜயகுமாரி
கொடிமலர்

7-வது வெற்றி வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

வெலிங்டன்
தினசரி 4 காட்சி
BEYOND THE TOSEIDON ADVENTURE

[illegible] (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி (யாழ். நகர்) 10-30, 2-30, 6-00 & 9-45
சிவாஜி - எஸ். எஸ். ஆர். - தங்கவேலு
பத்மினி - எம். என். ராஜம்
'தெய்வப் பிறவி'
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

வெற்றிகரமான 7-வது வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர். ★ லதா
பல்லாண்டு வாழ்க
(ஈஸ்ட்மன் கலர்)

3 வது வாரம்
ஒரு பெண்ணுக்கு துணிவு இருந்தால்மட்டும் போதாது துணையும் வேண்டும் என்பதை சித்தரிக்கும் சித்திரம்தான்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலூஜா ★ தேங்காய் ★ நம்பியார் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கனிமுத்து பாப்பா

உ
கோண்டாவில் கிழக்கு
அற்புத நர்த்தன விநாயகர் ஆலய
சகஸ்திர நவோத்திர
மகா சங்காபிஷேகம்

கிரியாகுரு சிவாகம வித்தியாபூஷணம் சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாதக்குருக்கள் (ஊரெழு) அவர்களால் நிகழும் துர்மதி வருஷம் ஆவணி மாதம் 17-ம் திகதி (2-9-81) புதன்கிழமை மேற்படி ஆலயத்தில் ஆவணிச்சதுர்த்தியும் சகஸ்திர நவோத்திர மகாசங்காபிஷேகமும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. அன்பர்கள் அனைவரையும் பங்கு கொண்டு விநாயகப்பெருமானது திருவருள் பெற்று உய்யும்வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்,

பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இப்படிக்கு
கோண்டாவில் கிழக்கு மக்கள். (0822)

## V. R. V.
## போக்குவரத்துச் சேவை

### கொழும்பு - யாழ்ப்பாணம்
### யாழ்ப்பாணம் - கொழும்பு

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு
செவ்வாய், வெள்ளி, ஆகிய நாட்களிலும்
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு
திங்கள், புதன் ஆகிய நாட்களிலும்
பஸ் சேவை நடாத்தப்படும்.

### கொழும்பில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

[1]
கிறீன்லண்ட் ஹோட்டல்
பம்பலப்பிட்டி.
தொலைபேசி இலக்கம்;
85592, 81986

[2]
கந்தையா
குறோசரீ ஸ்ரோர்ஸ்,
47, நொரிஸ் றோட்,
கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம்:
27748

[3]
V. R. வடிவேற்கரசன்
271, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி இலக்கம்; 34800, 32540

### யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

[1]
V. R. V. ட்ரான்ஸ்போட்
சேகரம் கட்டிடம்
188/3, ஆஸ்பத்திரி றோட்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 8162

[2]
றிக்கோ சுவீட் அன்
கிறீம் ஹவுஸ்,
தொலைபேசி இல.
464, 7884

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பஸ் பம்பலப்பிட்டி கிறீன்லண்ட் ஹோட்டலிலிருந்து இரவு 7-00 மணிக்குப் புறப்பட்டு நேரே செட்டியார் தெரு, கோவிலடிக்கு வந்து, அங்கிருந்து இரவு 7-30 மணிக்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி வெள்ளவத்தை வரை செல்லலாம்.


### சுதந்திரக்கட்சி தலைமையகம்:
# உரிமை கோரி திருமதி சிறிமா மனு

[கொழும்பு]
மருதானையிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமை அலுவலகம் தமக்கேஉரியதென்றும், அதனைத் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் கோரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மனுவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பமைச்சின் செயலாளரையும், கொழும்பு அரசாங்க அதிபரையும் இம்மாதம் 7ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மனுதார் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எச். எல். டி. சில்வா ஆஜரானார். எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி டி. ஜே. பெர்னாண்டோ ஆஜரானார்.

### சமதர்ம....
[3-ம் பக்கத் தொடர்ச்சி]

தலைத்தாகத்தை எழுப்பி உணர்வினை உருவாக்கி இலங்கையில் ஒரு புதிய மரபினையே உருவாக்கினார்கள்.

இந்நாட்டின் மருத்துவ சுகாதாரச் சேவைச் சீர்திருத்தம், இலவச சிகிச்சை, இலவசக் கல்வி முறை, அன்னைமொழிப் போதனை, நீர்ப்பாசனத் திட்டங்கள், விசேடமாக மகாவலி கங்கையை வடமாகாணத்துக்குத் திருப்புதல், சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நிறைவு பெற்ற சமத்துவம் அளித்தல், இலங்கையின் கலாசாரப் பண்பாட்டு மறுமலர்ச்சி ஆகிய சாதனைகள் எல்லாவற்றிற்கும் கரு அளித்த செம்மல், கருணாமூர்த்தி விக்கிரமசிங்கா என்பது பலர் அறியாது இருக்கலாம். ஆனால் வரலாற்று ஆசிரியர்கள், இந்நாட்டு வரலாற்றினைத் தர்க்கரீதியாக எழுதும்பொழுது இவ்வுண்மையை உணர்வார்கள்; உணர்த்துவார்கள்.

தனிப்பட்ட முறையில் இவர் அல்லலுற்ற மக்களுக்கு உணவும், இலவச மருத்துவ சேவையும் கொடுத்து ஆதரவளித்தார்.

[மிகுதி நாளை வரும்]

### பிரதமர் 'பிரேமா' அனுதாபம்

(கொழும்பு)

"காலஞ்சென்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா சுதந்திரமும், ஐக்கியமுமான இலங்கையை உருவாக்க பாடுபட்டுவந்தார். அவர் தமது லட்சியத்திற்காக தம்மை அர்ப்பணித்தார்."

மேற்கண்டவாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (வெ)

### விலையிலும் மயக்கமா?

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணத்திலுள்ள சில மதுபான விற்பனை நிலையங்களில் சாராயம் கூடிய விலைக்கு விற்கப்படுவதாக கூறப்படுகிறது.

விலைப்பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்படுவதில்லை என்றும் கூறப்படுகிறது.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி பார்வையிட்டார்

(கொழும்பு)
ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பெல்மதுளை, இரத்தினபுரி ஆகிய இடங்களுக்கு இன்று விஜயம்செய்து, வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார்.

ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன தனது சவூதி அரேபியா விஜயத்தை முடித்துக்கொண்ட பின்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வாரென ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்தார். (வெ)

### பாராளுமன்றம்...
[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டு நாடு திரும்பியதும் அவர் மேற்கொள்ளவிருக்கும் யாழ்ப்பாண விஜயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலை எப்படி இருக்கும் என்று திரு. அமிர்தலிங்கத்திடம் கேட்டபோது, "அந்தச் சமயத்தில் அதுபற்றி நாம் தீர்மானிப்போம்" என்று மட்டும் கருத்துவெளியிட்டார். [ம]


# மக்கள் வங்கி

தனது

யாழ் கன்னாதிட்டி கிளையை | பருத்தித்துறை கிளையை

1981 செப்டம்பர் மாதம் 2ம் திகதி புதன்கிழமை

காலை 9-30 மணிக்கு | நண்பகல் 12-00 மணிக்கு

கௌரவ யாழ். மாவட்ட அமைச்சர்

## திரு. யூ.பி. விஜயக்கோன் எம். பி.,

அவர்கள்

திறந்துவைப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது.

சகல வாடிக்கையாளர்களும், கூட்டுறவாளர்களும் ஆதரவாளர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

0810


## கஸ்தூரியார் வீதி கொள்ளை:
### அடையாளம் காணப்பட்டார்

[யாழ்ப்பாணம்]
யாழ். கஸ்தூரியார் வீதியில் நடந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பில் சந்தேகநபரான பாஸ்கரன் சண்முகராசா அடையாளம் காட்டப்பட்டார்.

யாழ். நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. ஏ. அன்ரனி முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

யாழ். கஸ்தூரியார் வீதியில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 20-ம் திகதி இரவு முல்லைத்தீவு வண்ணான் குளத்தைச் சேர்ந்த பனிதியாம்பிள்ளை யோகரத்தினம் வரும்போது இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு அவர் வசமிருந்த 1250 ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டு, அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டார்.

அடையாளம் காணப்பட்ட சந்தேகநபரை உடனடியாக நிரந்தர நீதவான் முன் ஆஜர் செய்யுமாறு பதில் நீதவான் திரு. ஏ. அன்ரனி கட்டளையிட்டார். [க]

## மரண அறிவித்தல்
### பிரம்மஸ்ரீ பண்டிதர்
### அ.சோமசுந்தர ஐயர்

அமிர்தாம்பிகை வித்தியாசாலை, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி முன்னாள் ஆசிரியரும், மீசாலை வீரசிங்க மகாவித்தியாலய முன்னாள் தலைமை ஆசிரியருமான பிரம்மஸ்ரீ பண்டிதர் அ. சோமசுந்தர ஐயர் அவர்கள் 31-08-81 முற்பகல் 11-80 மணிக்கு சிவபதம் எய்தினார்கள்.

இவர் காலஞ்சென்ற அலமேலு, சிவகாமசுந்தரி ஆகியோரின் அன்புக்கணவரும், சுப்பிரமணியன் [ஆசிரியர், மட்டுவில் மகாவித்தியாலயம்], அம்பிகாபதி [உள்நாட்டு இறைவரித் திணைக்களம்], அலமேலு, வசந்தா [இந்தியா], பவானி [இந்தியன் ஓவசீஸ் வங்கி], சாரதா [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், வெங்கட்ராமன் [கொமேஷியல் வங்கி] சங்கரன் [இந்தியா] ராமகிருஷ்ணன் [திட்ட அமுலாக்கல் அமைச்சு], ஸ்ரீதரன் [கட்டுபெத்த வளாகம்] ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மாவின் மைத்துனரும் ஆவர்.

தகனக் கிரியை 1-9-81 அன்று நடைபெற்றது.
சிவன்கோவிலடி, சாவகச்சேரி. 0820

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு செப்டம்பர் 2-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.